**DVOP. 21/2018**

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி 2 நல்லப்பன் த/பெ.பழனியப்பகவுண்டர் சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம்செய்விக்கப்பட்டார். மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை.**

**24.03.2023**

**<u>எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் மனுதாரர் லெட்சுமிக்கு தாய்மாமன் என்றால் சரிதான். லெட்சுமியின் திருமணம் பேரூரில் நடந்தது அதற்கு நான் சென்று இருந்தேன். லெட்சுமிக்கு திருமணத்தின் போது 26 பவுன் நகையை லெட்சுமியின் தாயார் அவருக்கு போட்டார். 26 பவுன் நகைக்கு கூடுதலாகவோ, குறைவாகவோ போடப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் லெட்சுமி மற்றும் 1ம் எதிர்மனுதாரர் ஆகியோர் திருமணம் முடிந்து 3, 4 மாதங்கள் சேர்ந்து வாழ்ந்தார்கள். நான் தாக்கல் செய்த சத்தியபிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் போட்டேன். 1ம் எதிர்மனுதாரர் சிவசுப்பிரமணியன் மனுதாரரை அடித்து காயப்படுத்தியதாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதா என்றால் புகார் கொடுக்கப்படவில்லை. சிவசுப்பிரமணியன் ஒரு இருதய நோயாளி என்றால் அது இப்போது 1 1/2 வருடங்களாகத்தான் திருமணத்தின் போது இல்லை.

1ம் எதிர்மனுதாரருக்கு பைபாஸ் அறுவை சிகிச்சை செய்து அதை தொடர்ந்து அவர் தொடர் மருத்துவ சிகிச்சையில் இருந்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரருக்கு தற்சமயம் எவ்வளவு சொத்து உள்ளது என்று எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரருக்கு 2 1/4 ஏக்கர் நிலம் மட்டும் பூர்விகமாக உள்ளது என்றால் சரியல்ல அவருக்கு 20 ஏக்கர் உள்ளது. 20 ஏக்கர் உள்ளதற்கான ஆவணத்தை என்னால் தாக்கல் செய்ய இயலுமா என்றால் அவர் தற்போது அந்த சொத்தை என்ன செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. மனுதாரருக்கு அவரது அம்மா 20 ஏக்கர் பூமியை எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். மனுதாரரின் சகோதரர் வடிவேல் பெயரில் தனியாக அவரது தாயார் சொத்து எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அவரது அப்பா பெயரிலும் சொத்து உள்ளது. மனுதாரரின் மகன்

பெயர் கார்த்தி அவருக்கு 23 வயதாகிறது. கார்த்தி படித்து முடித்துள்ளார். தற்போது விவசாயம் செய்து வருகிறார். லெட்சுமி மற்றும் கார்த்திக் ஆகியோருக்கு போதுமான நிலபுலம் உள்ளது என்றும், 1ம் எதிர்மனுதாரரின் பராமரிப்பில் வாழ வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை என்றால் சரியல்ல.

1ம் எதிர்மனுதாரரின் அம்மாவிற்கு 85 வயதாகிறது. 1ம் எதிர்மனுதாரர் அவரது தாயாருடன் வசித்து வருகிறார். 1ம் எதிர்மனுதாரர் அவரது வயதான அம்மாவை பராமரித்து வருகிறார் என்றும், மேலும் அவர் இருதய நோயாளி என்பதால் அவரால் கடினமான வேலை செய்ய இயலாது என்றும், மனுதாரர் மற்றும் அவரது மகன் கார்த்தி ஆகியோரை பராமரிக்கும் நிலையில் அவர் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரை மனுதாரர் தான் பராமரிக்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் தவறானது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்காக பழனி சார்பு நீதிமன்றத்தில் HMOP No.103/2011 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கை மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ தனக்கு விருப்பம் இல்லை என்று சொல்லியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்குமிடையே HMOP No.155/2015 மூலம் விவாகரத்து ஆகியுள்ளது என்றால் அதை பற்றி நான் கேள்விப்பட்டேன்.

20 வருடங்களுக்கு மேலாக மனுதாரரும் 1ம் எதிர்மனுதாரரும் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான். பிரிந்து வாழ்ந்து வரும் சூழ்நிலையில் மனுதாரருக்கு எதிராக 1ம் எதிர்மனுதாரர் எவ்வித குடும்ப வன்முறையையும் ஈடுபடுவதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வசம் உள்ள சொத்தை மனுதாரரின் மகனுக்கு பெற்று தருவதற்காகத்தான் இவ்வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனுதாரர் எனது மருமகள் முறை என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றும் இம்மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

K R KALAIVANAN Digitally signed by K R KALAIVANAN Date: 2023.03.24 14:29:25 +0530

நீதித்துறை நடுவர்,

பழனி.